**OS No.94/2019**

**Deposition of P.W.1**

**Dated : 12.06.2023**

**Name : Thiru. Nallakannu**

Solemnly affirmed by Thiru.P.A.Sivapadman

**2, 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கை யார் தாக்கல் செய்தது என்றால், எனது மனைவி கீதா தாக்கல் செய்துள்ளார். அவர் தற்போது உயிருடன் இருக்கிறார் என்றால், சரிதான். அவரை ஏன் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால், அவர் அமெரிக்கா சென்றுள்ளார். எனவே அவர் வரவில்லை. வாதி அமெரிக்காவில் இருப்பதால், நான் சாட்சியம் அளிப்பதாக எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். வாதி நீதிமன்றத்திற்கு சாடசியம் அளிக்கும் வகையில் உடல் நலத்துடன் இருக்கிறார் என்றால், அவர் இருதய நோயாளி ஆவார். வாதி இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதால், சாட்சியம் அளிக்க வரவில்லை என முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், சரிதான். வாதிக்கு இருதய நோய் இருப்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்ய வாதி விருப்படவில்லை என்பதால்தான், அவர் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றாலும், அவர் சம்பந்தப்பட்ட ஆவணம் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. பிரதிவாதிகள் வாதியின் சகோதரர்கள் என்றால், சரிதான். 1ம் பிரதிவாதி ஆனந்த் மற்றும் 4ம பிரதிவாதி குமார் ஆகியோர் அரசு பணியில் உள்ளனர் என்றால், பாரத ஸ்டேட் வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டனர். 2ம் பிரதிவாதி கண்ணன் மற்றும் 3ம் பிரதிவாதி அசோகன் ஆகியோருக்கு வேலை எதுவும் இல்லை என்றால், சரியல்ல. கண்ணன் பூக்கடை மற்றும் பேன்சி ஸ்டோர் வைத்துள்ளார். அசோகன் ரியல்எஸ்டேட் தொழில் செய்து, தற்போது காலமாகி விட்டார்.

அசோகன் ரியல் எஸ்டேட் தொழில் செய்தததை காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் இந்த பிரதிவாதிகளுக்கு வேலை எதுவும் என்பதால், 15.09.1992 தேதிய உயில் ஆவணத்தினை எழுதி வைத்ததார் என்றால், சரியல்ல. அது மோசடியான உயில் ஆவணம் ஆகும். இந்த உயில் எனது மனைவிக்கு தெரியும் என்றாலும், அவர் நீதிமன்றத்திற்கு வந்தால், உண்மை தெரிந்துவிடும் என்பதால், அவர் வரவில்லை என்றால், சரியல்ல. வாதியை வற்புறுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்ய நான் வைத்துள்ளேன் என்றால், சரியல்ல. வாதியின் தகப்பனார் எப்போது காலமானார் என்றால், எனது மாமனார் 11.06.2001 ல் காலமானார் என நினைக்கிறேன். வாதியின் தகப்பனார் காலமாகும்வரை வாதி பாகம் எதுவும் கோரவில்லை என்றால், அவரது தாயாரின் மீது இருந்த மரியாதையின் நிமித்தமாக கோரவில்லை. வாதியின் தந்தை மேற்சொன்ன உயில் ஆவணத்தினை வாதியின் சகோதரர்களான 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்தது தெரிந்துதான் அவர் பாகம் கோரவில்லை என்றால், சரியல்ல. எனது மனைவி சாட்சியம் அளிக்க வருவாரா என்றால், அவரால் தற்போது தனியாக இங்கு வர இயலாது. எனது மகனுடன் ஆகஸ்ட் மாதம் வரும்போது சாட்சியம் அளிக்க வருவார். 2 மற்றும் 3 பிரதிவாதிகள் உயிளின் அடிப்படையில் அந்த வீட்டில் குடியேறினார்கள் என்றால், சரியல்ல. அதற்குமுன்பே அவர்கள் கூட்டுகுடும்பமாக அங்கு இருந்தனர். 1,4 பிரதிவாதிகள்க பட்டிகைசொத்தான வீட்டில் குடியிருக்கவில்லை என்றால், சரிதான். அவர்கள் தனியாக வீடு கட்டியிருந்தனர். எனவே 2 மற்றும் 3 பிரதிவாதிகள் கூட்டுகுடும்பமாக இருந்ததாக நான் கூறுவது தவறு என்றால், சரியல்ல. அவர்கள் தங்களது தாயாருடன் அந்த வீட்டில் கூட்டுகுடும்பமாக இருந்தனர். வாதியின் தாயார் எப்போது காலமானார் என்றால், 03.06.2018 அன்று காலமானார். எனது மனைவி எந்தெந்த தேதிகளில் பிரதிவாதிகளிடம் தனக்குரிய பாகத்தை பிரித்து கேட்டார் என்றால், தேதிய ஞாபகம் இல்லை. மேற்சொன்ன உயில் ஆவணம் இருப்பதால், வாதி எந்த

காலத்திலும் பிரதிவாதிகளிடம் பாகம் கோர வில்லை என்றால், சரியல்ல. பிரதிவாதிகளிடம் பாகம் கோரியதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால், வாய்மொழியாக எனது மனைவி பாகம் கோரினார். உண்மையிலேயே வாதி பாகம் கோரி இருந்தால், எந்தெந்த தேதி, மாத வருடங்களில் பாகம் கோரினார் என்பது எங்களுக்கு தெரியும் என்றாலும், வாய்மொழியாக பாகம் கோரியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. வாதி, 3ம் பிரதிவாதியான காலமான அசோகனின் பொய்யான முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரியல்ல. சரியான முகவரிக்குதான் அனுப்பினார். 3ம் பிரதிவாதிக்கு கற்பனையான முகவரிக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளோம் என்றால், சரியல்ல. அவர் தனது தாயார் நோய்வாய்பட்டதால், அண்ணன் தம்பியுடன் தகராறு ஏற்பட்டு வேறு வீட்டில் இருந்து வந்தார். டாக்டர் பத்மநாபன் மற்றும் ஸ்ரீகுமரன் நாயர் ஆகியோர் காலமான வாதியின் தகப்பானரான கணேசபிள்ளைக்கு நெருக்கமானவர்கள் என்றால், பத்மநாபன் ஒரு எழுத்தாளர் ஆவார். அவர் பக்கத்துவீட்டுக்காரர் ஆவார். ஸ்ரீகுமரன் நாயரை கணேசபிள்ளைக்கு யார் என்றே தெரியாது. மேற்சொன்ன இருவரும் கணேசபிள்ளைக்கு நெருங்கிய நண்பர்கள் அல்ல என்றால், சரியல்ல. கணேசபிள்ளையின் நண்பர்கள் விபரம் எனது மனைவிக்குதான் நன்றாக தெரியும், சரியல்ல. எனக்கும் தெரியும். பத்மநாபன்தான் குடும்ப நண்பர் ஆவார். அவர் சென்னைக்கு வந்தால் எனது வீட்டில்தான் தங்குவார். 15.09.1992 தேதிய உயிலில் மேற்சொன்ன பத்மநாபன் மற்றும் ஸ்ரீகுமரன் ஆகியோர்கள் சாட்சிகள் என்றால், அதில் உள்ள கையெழுத்துகள் அவர்கள் உடையதுதானா என்பது எனக்கு தெரியாது. மேற்சொன்ன இருவரும்தான உயில் ஆவணத்தின் சாட்சிகள் என்றாலும், இந்த சங்கதி எனது மனைவிக்குதான் தெரியும் என்றாலும், சரியல்ல. எனது மனைவியை விசாரித்தால்தான் இந்த சங்கதிகள் தெரிய வரும் என்றால், அவர் ஊருக்கு வரும்போது விசாரித்துகொள்ளுங்கள். 15.09.1992 உயில் சட்டப்படி செல்லக்கூடிய ஆவணம் என்றால், சரியல்ல. இந்த உயில் ஆவணத்தினை நான் பார்த்திருக்கிறேனா என்றால், ஒளிநகலை பார்த்து இருக்கிறேன். பாகம் கோரி எனது

மனைவி என்ன முயற்சி எடுத்தார் என்றால், வாய்மொழியாக பாகம் கோரி வந்தார். இந்த சங்கதி எனது மனைவி வந்தால்தான் தெரியும் என்றால், சரியல்ல. நானும், எனது மனைவியும் பேசிதான் பாகம் கோரினோம். 1 மற்றும் 4 பிரதிவாதிகள் முதலில் பாகம் கோரி பின்னிட்டு உயில் குறித்து அறிந்து, கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்தததை நான் பார்த்தேனா என்றால், நான் பார்த்தேன். 3ம் பிரதிவாதி காலமானது சம்பந்தமாக குறித்த காலத்திற்குள் வாரிசுகளை கட்சி சேர்க்காததால் அசல் வழக்கு 04.10.2021 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்சொன்ன உயில் உண்மையாக நிறைவேற்றபட்ட உயில ஆவணம் என பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளார் என்றால் , அவருக்கு மலையாளம் தெரியாது. ஒரு வாரத்திற்குமுன்புதான் பிரமாண பத்திரம் இருப்பதாக எனக்கு தெரிந்தது. உயில் ஆவணத்தினை தெரிந்துகொண்டு 1, 4 பிரதிவாதிகள் 19.12.2021 அன்று 2ம் பிரதிவாதி மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள் பெயருக்கு பாகபத்திரம் போட்டனர் என்றால், சரியல்ல. வழக்கு தள்ளுபடியில் இருந்த நிலையில் அவசரமாக இந்த ஆவணத்தினை போட்டுள்ளனர். இந்த ஆவணம் குறித்து எனக்கு ஒரு வாரத்திற்குமுன்புதான் தெரியவந்தது. இந்த பாகபத்திரத்தில் 1 முதல் 4 பிரதிவாதிகள் சாட்சி கையொப்பம் போட்டுள்ளனர் என்றால், சரிதான். பட்டிகை சொத்து யாருக்கு உரிமைப்பட்டதோ அவரிடம் சென்று சேர்ந்துவிட்டது என்றால், அது தவறு. 2ம் பிரதிவாதி மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள் பட்டிகை சொத்தினை பாகபத்திரத்தின்படி பெற்று அனுபவித்து வருகின்றனர் என்றால், சரியல்ல. அவர்கள் ஏற்கெனவே அந்த சொத்தில் இருந்தது போல தற்போதும் இருந்து வருகின்றனர். அதற்கான 5ல் ஒரு பங்கு வாடகையை எங்களுக்கு தரவேண்டும். 2, 5 முதல் 7 பிரதிவாதிகள் உரிமையாளர்களாக இருந்து பட்டிகை சொத்தை அனுபவித்து வருகின்றனர் என்றால், சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் எதுவும் அவருக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால், சரியல்ல. நானும், 1ம் பிரதிவாதியும் 2012ல் ஒரு சொத்தினை சேர்ந்து வாங்கினோம் என்றால், 10 சென்டில் நான் 5 1/2 சென்ட்ம், 1ம் பிரதிவாதி 4 1/2 சென்ட்ம்

பிரித்து வாங்கினோம். 1ம் பிரதிவாதி தனது மகள் பெயரில் வாங்கினார் என்றால், சரிதான். அதை நல்ல விலைக்கு வேறொரு நபருக்கு விற்றுவிட்டார் என்றால், சரிதான். அந்த 4 1/2 சென்ட்டினை எனக்கு விற்கவேண்டும் என கூறிநான் தகராறு செய்தேன் என்றால், அவ்வாறு இல்லை. அது சம்பந்தமாக நான் 1ம் பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால், புரோக்கர் என்ற முறையில் அவருக்கு அனுப்பினேன். அந்த சொத்து எனக்கு கிடைக்காததால், நான் நிறைய பிரச்சினைகள் செய்தேன் என்றால், அவ்வாறு இல்லை. 1ம் பிரதிவாதி விற்ற நபரிடம் அவர் எனது சொத்தையும் விலைக்கு வாங்கி தருவதாக பொய்யாக கூறியதன் பெயரில் அந்த பில்டர் 10 அடி பொது பாதையில் ஒரு அடியை ஆக்ரமித்து கட்டுமானம் செய்து விட்டார். அந்த சொத்து எனக்கு கிடைக்காத காரணத்தினால், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் வேண்டாத காரியங்களை செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. எனவேதான் எனது மனைவியை வற்புறுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வழக்குமூலம் இல்லை என்பதால், இந்த வழக்கு 2,5 முதல் 7 பிரதிவாதிகளின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.